LTNE1A

# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A./B.Sc.** Degree (Semester) Examinations, November 2017

Part – IV : NME Subject : First Semester : Paper – I

**தமிழ் மொழியின் அடிப்படைக்கூறுகளும் தமிழ் இலக்கிய வரலாறும்**

Under CBCS – Credit 2

Time: **2** Hours | Max. Marks: **75**

---

## பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **(10 × 1 = 10)**

1. மெய் எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை
   அ) 18 ஆ) 20 இ) 11 ஈ) 7
2. உயிர் எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை
   அ) 12 ஆ) 40 இ) 13 ஈ) 9
3. சார்பெழுத்துகளின் மொத்த எண்ணிக்கை
   அ) 10 ஆ) 20 இ) 14 ஈ) 5
4. ஆயுத எழுத்து எத்தனை?
   அ) ஒன்று ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு
5. திருமூலரால் இயற்றப்பட்டது
   அ) திருமந்திரம் ஆ) மகாபாரதம் இ) இராமாயணம் ஈ) திருக்குறள்
6. அற இலக்கியங்களில் முதன்மையானது
   அ) திருக்குறள் ஆ) நாலடியார்
   இ) மணிமேகலை ஈ) கம்பராமாயணம்
7. பெரியபுராணத்தின் ஆசிரியர்
   அ) சேக்கிழார் ஆ) கம்பர் இ) வள்ளுவர் ஈ) அகத்தியர்
8. திருவாசகத்தின் ஆசிரியர்
   அ) மாணிக்கவாசகர் ஆ) கம்பர்
   இ) காளிதாசன் ஈ) அக்பர்
9. சிலம்பின் ஆசிரியர்
   அ) இளங்கோ ஆ) வள்ளுவர் இ) பாணர் ஈ) அசோகர்
10. வாலியைக் கொன்றது யார்?
    அ) இராமன் ஆ) லெட்சுமணன் இ) பரதன் ஈ) கிருஷ்ணர்

## பகுதி - ஆ

**அனைத்து வினாக்களுக்கும் இரண்டுபக்க அளவில் விடைதருக:** **(4 × 10 = 40)**

11. அ) உயிர் எழுத்து – வரிசைப்படுத்துக.

    **(அல்லது)**

    ஆ) மெய் எழுத்து – வரிசைப்படுத்துக.

12. அ) சார்பெழுத்து என்றால் என்ன?

    **(அல்லது)**

    ஆ) சார்பெழுத்தின் ஏதேனும் ஐந்தின் பெயரைச் சுட்டுக.

13. அ) பத்துப்பாட்டில் ஐந்தின்பெயரைச் சுட்டுக.

    **(அல்லது)**

    ஆ) எட்டுத்தொகையில் ஐந்தின் பெயரைச் சுட்டுக.

14. அ) திருக்குறள் - குறிப்பு வரைக.

    **(அல்லது)**

    ஆ) திருமந்திரம் - குறிப்பு வரைக.

## பகுதி - இ

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்றுபக்க அளவில் விடைதருக:** $\left(2 \times 12\frac{1}{2} = 25\right)$

15. பத்துப்பாட்டு நூல்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
16. எட்டுத்தொகை நூல்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
17. நீதி இலக்கியங்களின் பெயர்களைச் சுட்டுக.

# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A./B.Sc.** Degree (Semester) Examinations, November 2017

Part – IV : NME Subject : First Semester : Paper – II

**நீதி இலக்கியமும் தமிழ் இலக்கிய வரலாறும்**

Under CBCS – Credit 2

Time: **2** Hours Max. Marks: **75**

## பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **(10 × 1 = 10)**

1. நீதி இலக்கியங்களில் ஒன்று
   அ) நாலடியார் ஆ) அகநானூறு
   இ) புறநானூறு ஈ) மணிமேகலை
2. 'தெய்வப்புலவர்' என அழைக்கப்படுபவர்
   அ) இளங்கோ ஆ) திருவள்ளுவர்
   இ) சாத்தனார் ஈ) பாரதியார்
3. 'உத்திரவேதம்' என அழைக்கப்படும் நூல்
   அ) சிலம்பு ஆ) மேகலை இ) சிந்தாமணி ஈ) திருக்குறள்
4. நாலடியார் __________ பாடல்களை உடையது
   அ) நானூறு ஆ) முன்னூறு இ) பத்து ஈ) ஏழு
5. எட்டுத்தொகை நூற்களில் 'அகப்புறம்' சார்ந்த நூல்
   அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பரிபாடல் ஈ) குறுந்தொகை
6. பத்துப்பாட்டு இலக்கியத்தில் 'தொன்னூற்று ஒன்பது' மலர்களைக் குறிப்பிடும் நூல்
   அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு
   இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை
7. சிலப்பதிகாரத்தில் காப்பியத்தலைவியின் பெயர்
   அ) மணிமேகலை ஆ) கண்ணகி இ) தேவந்தி ஈ) சுதமதி
8. 'பௌத்த மதக்' காப்பியங்களில் ஒன்று
   அ) மணிமேகலை ஆ) இராமாயணம்
   இ) பெரியபுராணம் ஈ) ஏசுகாவியம்
9. அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் நூல்
   அ) பெரியபுராணம் ஆ) கந்தபுராணம்
   இ) சீவகசிந்தாமணி ஈ) மணிமேகலை
10. பெரியாழ்வாரின் 'தவப்புதல்வி'யின் பெயர்
    அ) ஆண்டாள் ஆ) காரைக்கால் அம்மையார்
    இ) திலகவதி ஈ) கண்ணகி

## பகுதி - ஆ

**அனைத்து வினாக்களுக்கும் இரண்டு பக்க அளவில் விடை தருக:**

**(4 × 10 = 40)**

11. அ) 'திருக்குறள்' நூற்குறிப்பு தருக?
    **(அல்லது)**
    ஆ) 'நாலடியார்' பற்றிக் குறிப்புரைக்க?
12. அ) 'எட்டுத்தொகை நூற்கள்' குறித்து எழுதுக?
    **(அல்லது)**
    ஆ) பத்துப்பாட்டில் 'ஆற்றுப்படை நூற்கள்' குறித்து எழுதுக?
13. அ) 'இரட்டைக்காப்பியங்கள்' குறிப்புரைக்க.
    **(அல்லது)**
    ஆ) 'சிலப்பதிகாரம்' நூற்குறிப்பு தருக.
14. அ) 'சைவசமயக் குரவர்' நால்வரைக் குறிப்பிட்டு எழுதுக.
    **(அல்லது)**
    ஆ) 'ஆண்டாள் நாச்சியாரின்' அருட்செயலை சுருக்கி எழுதுக?

## பகுதி - இ

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் மூன்றுபக்க அளவில் விடை தருக:** $(2 \times 12\frac{1}{2} = 25)$

15. 'அன்புடைமை' அதிகாரக் கருத்துக்களை வள்ளுவர் வழி விளக்குக.
16. 'கல்வி அதிகாரம்' முதல் ஐந்து பாடற்கருத்துக்களை நாலடியார் வழி நின்று விளக்குக.
17. 'அம்மாவின் நினைவு' கதையினை சுருக்கி எழுதுக.

P1LT11

# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A. / B.Sc.** Degree (Semester) Examinations, November 2017

Part I : Language : Tamil : First Semester : Paper – I

## இக்காலக் கவிதையும் உரைநடையும்

Under CBCS – Credit 3

Time: **3** Hours Max. Marks: **75**

---

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக: (10 × 1 = 10)**

1. "பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வார்" – யார் கூற்று?

   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) மேத்தா ஈ) இராமசந்திரன்

2. ஞான வாழ்வின் தீபம்

   அ) தேசிக விநாயகம் பிள்ளை ஆ) ராமகிருஷ்ண தேவன்

   இ) இராமலிங்கம் பிள்ளை ஈ) விவேகானந்தர்

3. காலத்தின் ஓட்டப்பந்தயத்திலே கலந்து கொள்வது

   அ) காற்று ஆ) மின்னல் இ) கெடிகார முள் ஈ) மின்சாரம்

4. உன்தொழிலே வாடகைக்குப் போவதுதானே

   அ) மின்சாரம் ஆ) பரத்தை இ) தாசி ஈ) ஒலிபெருக்கி

5. நல்ல மரம் ஒன்றில் உண்டாகி உறுதியானது

   அ) வித்து ஆ) கிளை இ) கனி ஈ) காய்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

6. சுயநலத் தியாகம் பண்ணியவன் _________.
7. மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் _________.
8. சார்பெழுத்தின் வகைகள் _________.
9. இலக்கணத்துடன் அமைவது __________ கவிதை.
10. 'ஆ' என்பதன் பொருள் _________.

## பகுதி – ஆ

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடை தருக:**

**(5 × 7 = 35)**

11. அ) நாமக்கல் கவிஞர் கூறும் குருதேவர் இராமகிருஷ்ணர் குறித்து எழுதுக. **(அல்லது)**

ஆ) கோவில் வழிபாடு பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறுக.

12. அ) கிழக்கு விழிக்கும் நேரமாகக் கவிஞர் வைரமுத்து கூறுவனவற்றை விளக்குக. **(அல்லது)**

ஆ) கா.ந. சுப்பிரமணியம் விளக்கும் 'கவிதை'யை எடுத்துக் காட்டுக.

13. அ) ஒழுங்குப்பாடான வாழ்வை சுவாமி சித்பவானந்தர் வழிநின்று நிறுவுக. **(அல்லது)**

ஆ) மனத்தின் மகிமையைப் புலப்படுத்துக.

14. அ) சார்பெழுத்தின் வகைகளை எடுத்துக்காட்டுக.

**(அல்லது)**

ஆ) வல்லெழுத்து மிகும் இடங்களில் ஏதேனும் நான்கினைச் சான்றுடன் எழுதுக.

15. அ) புதுக்கவிதையின் சிறப்புக்களை குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) **பிழைகளை நீக்கி எழுதுக.**

1) வீரர்கள் போரில் வென்றன

2) பசுக்குட்டி

3) சூரியன் ஒலிக்கதிர் நீட்டியது

4) வானம் மழை பொழிந்தான்

5) பூக்கள் மனம் வீசின

**பொருள் எழுதுக.**

6) 'ஏ' என்பதன் பொருள் கூறுக.

7) தலை – தளை

## பகுதி – இ

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக:** **(3 × 10 = 30)**

16. நடிப்புச் சுதேசிகளைப் படம்பிடித்துக் காட்டுக.

17. சுதந்திர இராகமாக மு.மேத்தா கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

18. நிறைகல்வியின் மேன்மைகளை விரித்தெழுதுக.

19. மொழிக்கு முதலாகும் எழுத்துக்களைச் சான்றுடன் புலப்படுத்துக.

20. மரபுக்கவிதையின் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.

✪✪✪✪✪

# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A. / B.Sc.** Degree (Semester) Examinations, November 2017

Part I : Language : Tamil : Third Semester : Paper – I

## காப்பியமும் பக்தி இலக்கியமும் நாடகமும்

Under CBCS – Credit 3

Time: **3** Hours Max. Marks: **75**

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக: (10 × 1 = 10)**

1. இம்மையே யெழுமை நோய்க்கு மருந்து

   அ) இராமன் ஆ) சிவன் இ) பரதன் ஈ) தசரதன்

2. அறத்தின் உருவம் போல்வான்

   அ) இராமன் ஆ) தருமன் இ) கண்ணன் ஈ) பீமன்

3. 'இரக்கம் உடையோர் பேறுபெற்றோர்' – என்று கூறியவர்

   அ) கண்ணன் ஆ) முருகன் இ) இயேசுபிரான் ஈ) சிவன்

4. எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதாகச் சொன்னவர்

   அ) தாயுமானவர் ஆ) இராமலிங்க அடிகள்

   இ) ஆண்டாள் ஈ) மாணிக்கவாசகர்

5. குருபக்தியில் மிகச் சிறந்தவன்

   அ) அர்ஜுனன் ஆ) துரோணர்

   இ) இந்திரன் ஈ) ஏகலைவன்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

6. 'மானுடக்குலக் கொழுந்தே' என்று ஜடாயு போற்றியவர் ______.
7. நாள், மலர், காசு, பிறப்பில் முடியும் பா
8. புகழ்வது போல் பழிப்பது _________.
9. தேசியக் காப்பியம் என்று போற்றப் படுவது _________.

10. நேர்காணலின் சிறப்பு __________ கூறுதல்.

## பகுதி – ஆ

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடைதருக:**

**(5 × 7 = 35)**

11. அ) அந்தணன் சொன்ன கருத்துக்களை ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை வழிநின்று விளக்குக.

**(அல்லது)**

ஆ) ஆபுத்திரனின் இரக்கச் சிந்தனையை எடுத்துக்கூறுக.

12. அ) ஆண்டாள் கூறும் நாராயணனின் சிறப்புக்களை எழுதுக.

**(அல்லது)**

ஆ) திருஞானசம்பந்தர் கூறும் சிவனின் பெருமைகளைத் திருவேடகப் பதிகம் கொண்டு எடுத்துரைக்க.

13. அ) 'தெய்வம் நீ என்றுணர்' என்ற நாடகத்தின் கதைக் கருவைப் புலப்படுத்துக.

**(அல்லது)**

ஆ) 'அன்பின் மெய்' நாடகத்தின் மையப்பொருளைச் சித்தரிக்க.

14. அ) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணத்தை விளக்குக.

15. அ) சைவ நாயன்மார்களில் இருவரின் சிறப்புகளை வெளிப்படுத்துக.

**(அல்லது)**

ஆ) ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்றவரிடம் பேட்டி கண்டு எழுதுக.

## பகுதி – இ

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக:** **(3 × 10 = 30)**

16. சிலப்பதிகாரத்தில் 'வழக்குரை காதை' ஏற்படுத்திய விளைவுகளைத் திறனாய்க.

17. திருவாசகத்தில் மாணிக்கவாசகரின் பிடித்த பத்தினை விரித்தெழுதுக.

18. 'வைகையில் வெள்ளம் வரும்' நாடகத்தின் மையப்பொருளை ஆய்க.

19. கணினி நிறுவனத்தில் வேலை வேண்டி ஒரு விண்ணப்பக் கடிதம் வரைக.

20. பத்திரிகைக்குச் செய்தி எழுதும் முறைகளை விவரி.

✪✪✪✪✪